5 JAN 2021
திருவையாறு-613

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் - திரு.ஆர்.வெங்கடேஸ்வரன்,

ந.க.எண். 6039 / 2019 / க3 நாள். 28-12-2020

பொருள் :: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - தஞ்சாவூர் மாவட்டம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - அரசுப்பணியாளர் தேர்வாணையம் - தொகுதி நான்கில் அடங்கிய பணிகள் - போட்டித் தேர்வு - 2015-16, 2016-17 மற்றும் 2017-18ஆம் ஆண்டு - இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு ஏற்பளிக்கப்பட்ட பட்டியல் வரப்பெற்று பணிநியமனம் வழங்கியது - இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து உத்தரவிடல்.

படிக்கப் பட்டவை ::

1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு சென்னை கடிதம் எண்.904/PSD-C3/2019, நாள். 13-02-2019.
2. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.430/2019/க3, நாள். 26-02-2019.
3. பள்ளிக்கல்வி இயக்ககத்திலிருந்து கல்விச்சான்றுகள் மீது பெறப்பட்ட மெய்த்தன்மை அறிக்கைகள்.
4. ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவையாறு கடிதம் ந.க.எண். 464/2020/அ.1, நாள். 11-12-2020.

------------

<u>உத்தரவு</u>

தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு 2015-16, 2016-17 மற்றும் 2017-18ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி IV-ன்கீழ் அடங்கிய போட்டித் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்ட தெரிவாளர் திருமதி.A.திவ்யமாலா என்பவருக்கு முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி ஒதுக்கீடு ஆணை வரப்பெற்றது.

(2) இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயலாணைகளின்படி தனியருக்கு இம்மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

(3) மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி இவரது கல்விச்சான்றுகளின் மீது மெய்த்தன்மை அறிக்கைகள் பெறப்பட்டன.

(4) நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி அலுவலகத்தலைவரது பரிந்துரைக்கப்பட்ட கருத்துரு பெறப்பட்டது.

(5) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தெரிவிக்கப்பட்டதன்படி, கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவருக்கெதிரே கலம் (5)-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் இவரது பணியினை இளநிலை உதவியாளர் பணி நிலையில் வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனை

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/ Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV for the year 2015-16, 2016-17 and 2017-18

| வ. எண். | பெயர்/ பதவி (திருவாளர்) | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | A. திவ்யமாலா, இளநிலை உதவியாளர் | ஊராட்சி ஒன்றியம், திருவையாறு | 01.03.2019 முற்பகல் | 01.03.2019 முற்பகல் |

24/12/2020

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி), தஞ்சாவூர்.

28/12/2020.

பெறுநர்

திருமதி. A. திவ்யமாலா,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், திருவையாறு. } - உரிய வழியாக.

நகல் - ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவையாறு.
நகல் - க.3 பிரிவு இருப்புக்கோப்பிற்கு.